**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PATTUKKOTTAI**

| | | |
|---|---|---|
| Case Number | | CC No.132/2015 |
| Deposition of witness | | PW- 4 /LW- 2 |
| Name | | திரு.சேகர் |
| Father's/Husband Name | | திரு.மதிவாணன் |
| Village | | துவரங்குறிச்சி |
| Taluk | | பட்டுக்கோட்டை |
| Age | | 36/2026 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 24th day of February 2026**

**(சாட்சியிடம் சத்தியப்பிரமானம் எடுப்பதற்கு நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட நீதிமன்ற அலுவலர் செல்வி.கு.பரமேஸ்வரி, bench clerk Gr-3 என்பவரால் சாட்சியிடம் சத்தியபிராமாணம் எடுக்கப்பட்டது)**

**(சாட்சியை நீதிமன்ற, இரண்டாம் நிலை காவலர் திரு. மாரிமுத்து 2552 தமிழ்செல்வன் என்பவர் அடையாளம் காட்டி நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டார்)**

**முதல் விசாரணை**

நான் துவரங்குறிச்சியில் குடியிருந்து வெளிநாட்டில் வேலை செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும், தேதி மாதம் ஞாபகம் இல்லை. என்ன நடந்தது என்று தெரியாது. எதிரிகளை தெரியும். வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

( அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது )

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை விசாரித்ததாகவும், கடந்த 17.09.2013 எனது வீட்டிற்கு அருகில் உள்ள குலதெய்வ கோவிலில் எங்கள் தெருவை சேர்ந்த வடிவேல் அவர் குழந்தைக்கு காது குத்தி கிடா வைத்து விருந்து வைத்தாகவும், அந்த நிகழ்ச்சியில் வடிவேல் மைத்துனர் ஆன்ந்த்குமார், அறிவழகன் வந்ததாகவும், மாலை 04.30

மணியளவில் எங்க அக்கா சாந்தியை அறிவழகன் திட்டியதாகவும், நான் ஏன் திட்டிகீறாய் என்று கேட்டதாகவும், அப்போது அறிவழகன் என்னை பிடித்துக்கொண்டு ஆன்ந்தகுமார் கோவிலில் இருந்த அருவாளை எடுத்துக்கொண்டு எனது வலது கை கட்டை விரல், மணிக்கட்டு, மோதிரவிரல் ஆகிய இடங்களில் அரிவாளால் கிழித்து விட்டதாகவும், சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் தடுத்ததாகவும், அப்போது அறிவழகன் ஆனந்த்குமார் ஓடிவிட்டதாகவும், எனக்கும் என் அம்மாவிற்கும் ஏற்பட்ட காயத்தினால் பட்டுக்கோட்டை GH ல் சிகிச்சைக்கு சேர்ந்ததாகவும், அப்போது எனது அம்மா போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாகிவிட்டபடியாலும், எதிரிகள் தெரிந்த நபர் என்பதாலும், தங்களுக்கே தெரிந்த காரணங்களுக்காகவும், எதிரிகள் குற்ற வழக்கில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கில் எதிரிகளுக்கு ஆதரவாகவும், அரசு தரப்பிற்கு எதிராகவும் உண்மைக்கு புறம்பாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை இல்லை**</u>

மேற்கண்ட சாட்சியமானது திறந்த நீதிமன்றத்தில் சாட்சியானவர் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து / படிக்க கேட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையெழுத்து / கைரேகை செய்யப்பட்டது.

ஒம்/- திரு. த.சுதர்சன்,எம்.ஏ.,எல்.எல்.பி.,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
பட்டுக்கோட்டை